**Most Rev. Dr. Rayappu Joseph, D.C.L., Rome.**
**Bishop of Mannar, Bishop's House, Mannar, Sri Lanka.**

MINISTRARE IN HUMILITATE

Tel- 023-2222503; 060-2231732; 023-2222710 Fax: 023-2222709
E-mail : bpjoseph@sltnet.lk or jrayappu@yahoo.com

01-04-2008

## ஊடக வெளியீடு:

### எல்லாவித போர்-இராணுவ ரீதியான நடவடிக்கைகள், நடமாட்டங்களிலிருந்து மடுத்திருப்பதியைப் பாதுகாக்க வேண்டுகோள்

இலங்கைவாழ் கத்தோலிக்க மக்களுக்கு மடுத்திருப்பதியானது பெருவணக்கத்துக்கும் பக்திக்குமுரிய ஒப்பற்ற ஆன்மீக திருத்தலமாக விளங்குகின்றது. ஏனைய மதங்களைச் சார்ந்த மக்களுக்கும் மருதமடு தனித்துவமானதோர் அருட்தலமாகத் திகழ்ந்து ஆன்மீக அருளைப் பொழிந்து வருகின்றது. பாதுகாப்பைத் தேடும் மக்களுக்கு மருதமடு அடைக்கலப் பூமியாகவும், இடம்பெயர்ந்தோருக்கு இல்லிடமாகவும், உள்நாட்டிலும் சர்வதேச அரங்கிலும் புகழ்பெற்று விளங்குகின்றது. திருச்சபைத் தலைமைப் பீடமானது இத்திருப்பதியையும், சுற்றாடலையும் ஆன்மீக வாழ்வுக்குரிய புனித பூமியாகவும், இடம்பெயர்ந்த மக்களுக்குப் புகலிடமாவும், தொடர்ந்து பேணிக்காத்து வந்திருக்கின்றது. சகலவிதமான இராணுவ அல்லது அரசியல் செயல்பாடுகளும் முற்று முழுதாக இங்கு தடைசெய்யப்பட்டு வந்தன.

கடந்த சில வாரங்களாக இராணுவ நடவடிக்கைகள் இப்பகுதியில் தீவிரப் படுத்தப்பட்டதனால், இந்தத் திருத்தலமும் அதனுடைய ஆன்மீக, மனிதாபிமானப் பணிகளும் ஆபத்துக்குள் தள்ளப்பட்டிருப்பதையிட்டு நாம் மிகவும் கவலை கொள்கின்றோம். எறிகணை வீச்சுக்கள் மடுத்திருப்பதி வளாகத்துக்குள் தொடர்ச்சியாக வீழ்ந்து வெடித்துக்கொண்டிருக்கின்றன. இதனால் அங்கிருந்த மக்கள் ஒரு சிலரைத் தவிர ஏனையோர் வெளியேறியுள்ளனர். குருக்களும், அருட்சகோதரிகளும், தேவாலயப் பணியாளர்களும் இங்கு தொடர்ந்திருந்தாலும் இந்த பயங்கரச் சூழலில் பதுங்கு குழிகளில் தங்கியிருக்க வேண்டிய நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டிருக்கின்றனர்.

இலங்கைக் கத்தோலிக்க ஆயர் மன்றமும், மன்னார் ஆயரும் குருக்களும் அரசாங்கத்திடமும் விடுதலைப் புலிகளிடமும் தொடர்ந்து கோரிக்கை விடுத்து; இலங்கை வர்த்தமானி மூலம் 1982ம் ஆண்டு மடுத்தேவாலய "ஒதுக்கீட்டு நிலம்" எனக்குறிக்கப்பட்ட பகுதியிலே எல்லாவிதமான அரசியல் அல்லது இராணுவ நடமாட்டங்கள் நடவடிக்கைகள் என்பனவற்றை முற்றாகத் தவிர்க்க வேண்டுமென்றும்; இந்தத் திருப்பதியின் புனிதத்தையும், மனிதாபிமானத் தன்மையையும் மதிக்க வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்துள்ளார்கள். மடுத்திருப்பதியைச் சமாதானப் பிராந்தியமாகப் பிரகடனப்படுத்தி போர் நடவடிக்கைகள், நடமாட்டங்கள் முற்றாகத் தடைசெய்யப்பட்ட நிலையிலே இத்திருத்தலம் தனது அரியபணியைத் தொடர ஆவன செய்து தர வேண்டும் என்று, இலங்கை ஜனாதிபதிக்கு பல தடவைகளில் அண்மைக் காலங்களில் கோரிக்கைகளும் எம்மால் விடப்பட்டுள்ளன.

இன்று மடுத்திருப்பதிக்கு மிக அண்மையில் இராணுவ நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதால், மடுத்திருப்பதியையும் அதன் சுற்றாடலையும் அமைதிப் பிராந்தியமாக மதித்து இப்பகுதிக்குள் வருவதை முற்றாகத் தவிர்க்குமாறும்; திருச்சபையின் நிர்வாகத்தின் கீழ் இப்பகுதி இயங்குவதை உறுதிப்படுத்துமாறும் இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஒருமித்த அவசரமான வேண்டுகோளை விடுக்கின்றோம். இந்த நெருக்கடியான நேரத்தில் கத்தோலிக்க மக்களுக்கும் மருதமடுத்தாயாரின் பக்தர்களான மற்ற சமயங்களின் அன்பர்களுக்கும் இலங்கையின் மதத்தலைவர்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் வேண்டுகோள் விடுத்து இந்த சிறப்புமிக்க ஆன்மீக மையத்தின் புனிதத் தன்மையையும் தனித்துவத்தையும் பாதுகாக்க நாம் எடுக்கும் முயற்சிகளில் எம்முடன் இணைந்து செயற்படுமாறு அன்போடு வேண்டி நிற்கின்றோம்.

இந்நோக்கத்தையிட்டு, நாளை சித்திரைத் திங்கள் 02ம் நாள் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் காலை 09: 30 மணி தொடக்கம், சிறப்பு இறைவழிபாடு ஒன்றை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளோம். இராணுவ அரசியல் நடவடிக்கைகளிலிருந்து மருதமடுத் திருப்பதியை முற்று முழுதாக விடுவிக்க இலங்கை அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் நாங்கள் விடுக்கும் உருக்கமான வேண்டுகோளுடன் இணைந்து குரல்கொடுக்க கத்தோலிக்க மக்களுக்கும் நல்லெண்ணம் கொண்ட அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றோம். இந்தக் கருத்துக்காகவும், எமது தாய் நாட்டின் அமைதிக்காகவும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் உண்ணா நோன்பு இருந்து செபிக்குமாறும் ஒவ்வொரு சனிக்கிழமையும் திருச்செபமாலையை உருக்கமாகச் செபிக்குமாறும் சொல்லுமாறும் எல்லா விசுவாசிகளுக்கும், மடுத்தாயின்பக்தர்களுக்கும் அன்பு வேண்டுகோள் விடுக்கின்றோம். மடுவிலே குடிகொண்டிருக்கும் எமது நாட்டு மக்களின் அன்புத் தாயார், எமது அரிய நாட்டிற்கு அரசியல் தீர்வின் ஊடாக அமைதியை அருளி, எம் மக்களை ஆசீர்வதிப்பாராக.

+ [signature] 01-04-2008.

மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை
மன்னார் ஆயர்

Most Rev. Dr. Rayappu Joseph D.C.L.D.D. * Bishop of Mannar, Sri Lanka.